உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - பண்ணாகம்

★

இளைப்பாறிய ஆசிரியர்

அமரர் உயர்திரு

## அப்பச்சி எதிர்வீரசிங்கம்

அவர்களின்


சிவபதப்பேறு குறித்த

# ஞாபக மலர்

**10 - 08 - 1992**

உ
சிவமயம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''



இளைப்பாறிய ஆசிரியர்
அமரர் உயர்திரு

# அப்பச்சி எதிர்வீரசிங்கம்

அவர்கள்

அன்னையின் மடியில்
12 - 04 - 1914

ஆண்டவன் திருவடியில்
11 - 07 - 1992

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா ஒளியாக்
கருவாய் யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

உ

# அமரர் அப்பச்சி எதிர்வீரசிங்கம் அவர்களின் வாழ்ந்து முடிந்த வாழ்க்கையின் சில பகுதிகள்

ஈழமணித்திருநாட்டின் தலையென திகழ்வது யாழ்ப்பாணம் யாழ்ப்பாணத்தில் நீர்வளமும் நிலவளமும் சிறந்து விளங்குவதும் ஒற்றுமையும் நேர்மையும் பண்புடைமையும் அஞ்சாமையும் பொருந்திய மக்கள் பலரும் இன்புற்று வாழுவதுமான பண்ணாகம் என்ற சிறிய கிராமத்தில் சைவ வேளாளர் குலத்தில் உதித்த இராமலிங்கம் அப்பச்சிக்கும் அவர் மனையாள் செல்லம்மாவிற்கும் 1914ம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி ஆயிலிய நட்சத்திரத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது அக் குழந்தை தான் எதிர்விரசிங்கம் ஆவார் அவருக்கு இராமலிங்கம் திருநாவுக்கரசு இராசம்மா என்ற உடன் பிறப்புக்கள் இருந்தனர். இவர்கள் எல்லோரும் சிறு வயதிலே அன்போடும் பண்போடும் வளர்ந்து வந்தனர்.

அமரர் அவர்கள் தனது கல்வியை பண்ணாகம் மெய் கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து சிரேஷ்ட வகுப்பு வரை திறமையாக கல்வி பயின்றார் திறமையாக தேர்ச்சியும் பெற்றார் பின்பு மலேசியா நாட்டிற்கு சென்று 1936ம் ஆண்டு தொடக்கம் 1945ம் ஆண்டு வரை அங்கு ஆசிரியராக பணிபுரிந்தார். இரண்டாம் உலக மகாயுத்த காலத்திலும் அங்கு பணிபுரிந்தார் என்பது விசேடமாகக் குறிப்பிடக் கூடியது பின்பு அமரரின் தாயாரும், உற்றார் உறவினரும் அவரை இல்லறமாம் நல்லறத்தில் சேர்க்க உத்தேசித்தனர். இதன் பிரகாரம் திரு. அருணாசலம் செல்லையாவுக்கும் அவர் மனையாள் இராசம்மாவிற்கும் மூத்த புதல்வியாக பிறந்த மகேஸ்வரி என்னும் மங்கை நல்லாளை மணம் புரிந்து வைத்தனர். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இல்லறத்தை இன்புற நடத்தி வந்தனர். மகேஸ்வரி என்னும் மங்கை நல்லாளுக்கு காலஞ் சென்ற கணக்காளர் திரு. சபாநாயகர், திருமதி புவனேஸ்வரி, சிவரத்தினம், பொறியியலாளர் திரு. பரமானந்தன் என்போர் சகோதரர்களாக அமைந்தனர்.

அமரர் அவர்கள் எல்லாத் தொழில்களிலும் சிறப்புற விளங்கும் ஆசிரியர்த் தொழிலையே செய்ய வேண்டுமென விரும்பி 1946ம் ஆண்டு ஆசிரியப் பதவி ஏற்றார். இத் தொழிலை அவர் புனிதமான பணியாக ஏற்று நடாத்தி வந்தார். கடமை, கண்ணியம் கட்டுப்பாடு, என்ற கோட்பாடிற் கமைய பணியாற்றி பல நல் மாணாக்கர்களை உருவாக்கினார் இதனால் பல நன்றியுள்ள மாணவர்களின் பாராட்டுக்களையும் பெற்றார். பின்பு ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து அங்கு சிறந்த முறையில் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார், இவர் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தனியூற்றிலும் முள்ளியவளையிலும் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராக பணிபுரிந்தார், பின்னர் தனது கிராமத்திலுள்ள மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக பணி புரிந்தார், கடமையில கண்ணும், கருத்துமாக இருந்ததோடல்லாமல் நேரம் தவறாமல் பாடசாலைக்கு சென்று ஒரு முன்னுதாரண புருஷனாக விளங்கினார். சக ஆசிரியர்கள் நேரம் தவறி வருவதனை சுட்டிக் காட்டியமையால அவர்களின் அர்த்த மற்ற வெறுப்புக்கும் ஆளானார். ஏழை மாணவர்கட்கு தனது செலவிலேயே பாடப்புத்தகங்கள் கொப்பிகள் என்பவற்றை வாங்கிக் கொடுத்து கல்வியில் ஊக்கப்படுத்தினார். ஒழுங்காக பாடசாலைக்கு சமூகம் கொடுக்காதவர்கள் கல்வியில அக்கறை செலுத்தாதவர்கள் நேரம் தவறி வகுப்பிற்கு சமூகம் கொடுப்பவர்கள் என்போருக்கு கடுமையாக தண்டனை கொடுப்பார், இதனால் பாதிக்கபபட்ட மாணவர்கள் பெற்றார்கள் என்பவரின் வசை மொழிக்கும் ஆளாக்கப்பட்டார். அமரர் இதையும் பொருட்படுத்தாது, தனது வழி நேர்மையானது, நியாயமானது என்று எண்ணி, தன வழியே, சிறந்ததென நினைத்து, அமரத்துவம் அடையும்வரை சிறப்பாக வாழ்ந்தார்.

அமரர் அவர்களும் அவரின் பத்தினியாரும் நடாத்திய இல்லற பயனாக யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக பணிபுரியும் லோகநாயகி என்பவரை மூத்த புதல்வியாகவும் அடுத்து மங்களராணி, தவயோகன், பவளகுமாரி, குபேந்திரன், செல்வகுமாரன், மோகனா என்னும் செல்வங்களையும் பெற்றெடுத்தனர். இச்செல்வங்களை கல்வியில் ஊக்கப் படுத்தி அவர்களால் இயன்றவரை கல்வி கற்க அரும்பாடுபட்டார். தனது 2 வது புதல்வியை நவரத்தினம் கருணேஸ்வரன் என்பவருக்கு ஜேர்மனியில் திருமணம் செய்து

வைத்தார். தனது ஆண்மக்களில் தவயோகன் என்பவரை சுவிற்சிலாந்திற்கும் குபேந்திரன் என்பவரை ஓமானுக்கும் அனுப்பி அங்கு பணிபுரிய வைந்தார் அமரருக்கு சங்கீதத்தில் மிகவும் நாட்டம் உண்டு சங்கீதம் என்றாலே தன்னை மறந்து விடுவார். இதனால் தனது மகள் பவளகுமாரியை யாழ்ப்பாணம் நுண்கலைப்பிரிவில் இசைத்துறையில் பயிற்று வித்து, இசைக்கலைமணி, என்ற பட்டம் பெற செய்தார். தனது ஆண்மக்களில் ஒருவரான செல்வகுமாரனை, யாழ்ப் பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் வணிகவியல் மாண வனாகவும், மோகனா என்ற மகளை வட்டு இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலவும் செய்தார்.

இவர் தனது ஓய்வு நேரங்களில் ஏதாவதொரு வேலை செய்துகொண்டே இருப்பார் ஒவ்வொரு நாளும் மாலைநேர மானால் பூக் கூடையுடன் விசவத்தனை முருகன் ஆலயத்திற்கு சென்று வருவார். அங்கு ஆலய சுற்றாடலை மிகவும் புனித மாக இருக்கும்படி பார்த்துக் கொள்வார். தனது பிள்ளை களையும் சோம்பேறிகளாக இருக்க விடமாட்டார் தான் பெற்ற செல்வங்கள் தன்னைப் போலவே வாழ வேண்டுமென ஆண்ட வனைக் கேட்பார்.

அமரர் அவர்கள் 11. 7. 1992 சனிக்கிழமை மாலை 4. 50 மணிக்கு தனது மனைவி பெற்றெடுத்த செல்வங்களை விட்டு முருகனின் திருவடி நிழலை ஆனந்தமாக அடைந்தார்.



## விநாயகர் துதி

### வெண்பா

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### தேவாரம்

அங்கத்தை மண்ணுக் காக்கி
ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தை போகமாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா
சாதல் நாள்நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால்
இங்குற்றேன் என்கண்டாயே.

### திருவாசகம்

அருளுடைச்சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா

ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன்செய்யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகு திருவாரூரில்
மழ விடையாற்கு வழி வழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடியாரொடுங் கூடி யெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உச்சியில் மகுடமின்ன ஒளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேளமாமுகங் கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கரக் கணபதிக் கன்பு செய்வாம்.

## திருப்புகழ்

வரதா மணினி யென வோரில்
வருதா தெதுதா நதில் வாரா
திரதா திகழால் நவலோகம்
இடவே ஹரியா மிதிலேது
சரதா மறையோர் அயன்மாலும்
சகலாகம நூல் அறியாத
பரதேவதை யால் தருசேயே
பழனா புரிவாள் பெருமாளே.

உ
சிவமயம்



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னனடி போற்றி
சீர்ஆர் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை

முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன் அடிகள் கண்டு இன்றுவீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

# நேர்மையும், கடமையில் கண்ணும் கருத்தும் கட்டுப்பாடுமுடைய கர்மவீரன்

மயிலேறும் வடிவேலனை என்றும் மனத்தில் மறவாத மாண்புடையவராக விளங்கிய அமரர் அப்பச்சி எதிர்வீரசிங்கம் அவர்கள் உலகில் மேம்பாடுடைய தொழிலான ஆசிரிய சேவையை மேற்கொண்டு நாடும் வீடும் போற்றும் நல்லாசிரிய ராக விளங்கினார். நேரம் தவறாத சிறந்த ஆசிரியர் என்ற பேர் பெற்று விளங்கினார்.

அவர் எம்மூரின் கண்களுளொன்றாகிய பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் நெடுங்காலமாக ஆசிரியராக இருந்து எமதூர்ச் சிறார்களை ஒழுக்கம், கட்டுப் பாடுடைய விழுப்பம் மிக்கவர்களாகவும், அறிவிலும் ஆற்றலிலும், பண்பிலும் சிறந்தவர்களாகவும் விளங்க வைக்க அரும்பாடு பட்டுழைத்தார்.

விவேகமும், மதிநுட்பமும், உயர்ந்த சிந்தனையும் மறந்தும் மனதாற் பிறருக்குத் தீங்கு விளையாத நற்பண்பும் கொள்கைப் பிடிப்பும், சரிபெனப்பட்டதைக் கூறும் நேர்மைத் திறமும், எமது கிராம வளர்ச்சியில் நாட்டங் கொண்ட வராகவும் பணிகள் பல செய்து வந்தார். தமது உடன் ஆசிரியர், தன்னைச் சேர்ந்தவர்கள், ஊரவர்கள் மனங்களிப்ப நற்றொண்டுகளை விரும்பிச் செய்தார்.

எமது பரிபாலன சபையின் மூத்த உறுப்பினரான அமரர் ஆலயத்தின் வளர்ச்சியில் மிகவும் ஈடுபாடு கொண்டு உழைத்தார். நிர்வாகஸ்தரான, அவர் ஆலயத்திற்கு ஒரு தேர் இல்லாத குறையைப் போக்க, தேர்த்திருப்பணிச் சபையின் தனாதிகாரியாக இருந்து, எம்மூரவர்களின் உதவியினால் பெரும் பொருள் சேர்த்து ஒரு அழகிய சித்திரத்தேரை அமைத்துத் தந்தார். அத்தேரில், தேரோடும் போது கிண்கிணி மணி ஓசை எழுப்புகின்ற மணிகளையும் பெண்மணிகள் மூலம் பெற்றுதேரிற்பூட்டி வைத்தார். தேர்த் திருவிழாக் காலங்களில் தாமே முன்னின்று தேரொழுங்குகளை, கவனித்து ஆவன செய்து வந்தார்.

ஆலயத்தில் சங்காபிஷேக காலங்களில் பிற இடங்களிலிருந்து சங்குகளைப் பெற்று வந்து விழாச்செய்வதைக் கண்ணுற்ற அமரர், ஆலயத்திலேயே அவற்றை நிரந்தரமாக வாங்கி வைக்க வேண்டுமெனத் தம் மனதிலெழுந்த எண்ணத்தை எம்மூர்ப் பெண்மணிகளைக் கொண்டு நிறைவு செய்து மகிழ்ந்தார்.

சங்காபிஷேக காலங்களில் சங்குகள் அடுக்கப்படுகின்ற மண்டபங்களுக்கு சித்திரப்பாடல்களை செய்வித்து வைத்து தாமே முன்னின்று அம்மண்டபங்களை அழகுற அமைத்தும் வந்தார்.

எதனையும் அழகாகவும், ஒழுங்காகவும் சிறப்பாகவும் வைத்திருக்க வேண்டுமென்ற பெருவிருப்புடைய அமரர், ஆலயத்தின் ஸ்திரமான அழகான அமைப்பிற்கான ஆலோசனைகளை வேண்டிய போதெல்லாம் தாமாக முன்வந்து வழங்கி வரலாயினர்.

ஆலய வருவாயைப் பெருக்குவதற்கு ஊரில் நடைபெறும் அந்தியேட்டிகளில் கலந்து கிரியைச் சாமான்களை ஏலத்தில் விற்று கூடிய பணத்தைத் தானமாகப்பெறச் செய்தமை போற்றுதற்குரியது.

மகளிர் கிராம அபிவிருத்தியிலும் ஊக்கம் காட்டினார். அவர்களுக்கென ஒரு இடத்தை எடுத்து ஒரு சிறந்த கட்டடத்தை நிருமாணிப்பதில் பெரும் பங்கு கொண்டுழைத்து. அனைவரினதும் பாராட்டைப் பெற்றார்

தமது முதுமைப் பராயத்தில், தள்ளாத நோயுற்ற நேரத்திலும் கூட ஆலயத்துக்குப் புஷ்பங்கள் பறித்துவந்து கொடுத்து ஆலயம், புனிதமாகவும், துப்பரவாகவும், ஒழுங்காகவும் மிளிர ஏற்ற வகையில் அயராது தொண்டுகள் பல செய்தார்.

நல்லாசிரியராய், அன்பிற் சிறந்தவராய், அநுபவ ஆற்றல் மிக்கவராய், ஆலயத் தொண்டராய் ஊரில் நடைபெறும் விழாக்களில் வழிகாட்டியாய்த் தொண்டராய் விளங்கிய அமரர் இன்று எம்மிடையே இல்லை. மாணவரது அகவாழ்வையும், புறவாழ்வையும் மலரச் செய்த ஒளி விளக்கு அணைந்துவிட்டது.

என்செய்வோம் விதி யாரை விட்டது பிறந்தார் இறப்பது திண்ணம், இப்படியான அநுபவ மிக்கவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது அன்பு மக்கள், சுற்றத்தார் அனைவருக்குமே இது தாங்க முடியாத பேரிழப்பாகும்.

அன்புள்ள ஆசிரியர் அவர்கள் அவனியைவிட்டு அமரத்துவமடைந்து விட்டார். அவர் என்றும் இன்பம் பெருக, எம்மையெல்லாம் ஆளும் ஆன்மநாயகன், முருகப் பெருமானுடைய பாதகமலங்களையடைந்து இன்புறுவாராக.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக

சாந்தி சாந்தி சாந்தி

எந் தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந் தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

பண்ணாகம்
27 - 07 - 92.

விசவத்தனை முருகமூர்த்தி
கோவிற் பரிபாலன சபை

# கடமை உணர்வு நிறைந்த ஆசான்

எமது மன்றக் காப்பாளராக இருந்த அமரர் அப்பச்சி எதிர்வீரசிங்கம் ஆசிரியர் அவர்கள் எமது மன்ற வளர்ச்சிக்கு அரியபல ஆலோசனைகளை வளங்கியதோடு ஆக்கமும் ஊக்கமும் தந்து வந்தார் இவர் காப்பாளராக இருந்த காலத்தில் எமது மன்றத்தின் 10 வது ஆண்டு விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடக் கூடிய அரிய வாய்ப்பு எமக்கு கிடைத்தது.

இவரது மூத்த புதல்வன் தவயோகன் எமது மன்றத்தில் செயலாளராக இருந்ததோடு வேறு பல முக்கிய பதவிகளையும் ஏற்று திறம்பட செயலாற்றி வரும் பொழுது இவர் தனது முன்னேற்றம் கருதி வெளிநாடு சென்றவேளை அவருடைய பணியின் இடை வெளியை தொடர்ந்து நிரப்புவதற்கு அமரர் அவர்கள் தமது இளைய மகனாகிய செல்வக் குமாரனை எமது மன்றத்தின் இயல்துறை இயக்குனராக இருந்து பணியாற்றுவதற்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கிவந்தார்.

இவர் மேற்கொண்ட பொதுப் பணிகளை சிறப்புற நிறைவேற்றுவதில் எந்தவித இடையூறு ஏற்படினும் அவற்றை பொருட்படுத்தாது தான் எடுத்த காரியத்தை தொடுத்து முடிப்பதில் மிகவும் வல்லவராக விளங்கினார் இவர் எந்தக் காரியத்தையும் குறித்த நேரத்தில் செய்ய வேண்டுமென்னும் குறிக்கோள் உடையவராக இருந்ததோடு மற்றவர்களும் அப்படி செய்ய வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். எமது கிராமத்தில் உள்ள பல பொது விடயங்களை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டபோது தன்னுடைய சொந்த விடயங்களை செய்வது போன்ற உணர்வுடன் செயல்பட்டு வந்தார்.

எமது கிராமத்தில் உள்ளவர்களில் பலர் இவரிடம் கல்வி பயின்றவர்களாக விளங்குகின்றனர் இவர் தனது ஆசிரிய சேவையை புனிதமான பணியாக எண்ணி செயலாற்றி வந்தார் எமது கிராமத்தின் இருகண்களாக விளங்குகின்ற பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் உயர்வுக்காகவும், விசவத்தனை முருகமூர்த்தி கோயிலின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடு பட்டதோடு முருகப்பெருமானை நாள்தோறும் சென்று வழிபாடு செய்யும் நியமம் பூண்டிருந்தார் இவ்வாறு முருகப் பெருமான் மீது இடையறாப் பக்தி பூண்ட இவரது ஆத்மா எம்பெருமானின் திருவடி நீழலை அடைந்து சாந்தியடையுமென நம்புகின்றோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**பண்ணாகம் அண்ணா கலை மன்றம்**

# எனது ஆசிரியர்

எனக்கு வழி காட்டிய ஆசிரியர்களுள் முதன்மையானவர் திருவாளர் கந்தசாமி ஆசிரியர் ஆகும். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை என் வாழ்நாளில் கடைப்பிடிக்க இவர் வழிகாட்டியாக இருந்தார் எனது வகுப்பு ஆசிரியராக இருக்கும் போதே இதை அறிந்து கொண்டேன் ஒவ்வொரு நிமிட நேரமும் வீண் விரையமாகாமல நலவழியில் செலவழிக்க முடியும் என்பதற்கு பாடசாலையில் முன மாதிரியாக விளங்கினார். நேரம் தவறாமல் குறித்த நேரத்துக்கு பாடசாலைக்கு வருவார். இதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் புகழ்ந்து பேசினார்கள் தூய வெண்ணிற வேட்டி நாசனலுடன் அவர் வகுப்புக்கு வரும் கோலம் இன்றும் என உள்ளத்தில நீங்காதுள்ளது. படிப்பில் பின் தங்கிய மாணவர்களை நல்வழிப்படுத்த கடுமையாக நடந்து கொண்டதால் அம்மாணவர்களால் பொல்லாத ஆசிரியர் என்ற பெயரை பெற்றார். உண்மை என்றும் உறங்காது பொய் என்றும் நிலைத்து நிற்பது இல்லை அவ்வாறே ஆசிரியரின் புகழ் விளங்கியது.

என் முன்னேற்றத்தில் பெரிதும் விரும்பி என்னை வேறு பாடசாலைக்கு அனுப்பி வைத்தார். அவரின் விருப்பத்தின் ஒரு பகுதியை தற்போது நிறை வேற்றி கொண்டு இருக்கிறேன். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநீதி என்பதை கோயில் தேர் வெள்ளோட்டத்தில் காண்பித்தார். வடத்தின் ஒரு பக்கம பெண்களும், மறுபக்கம் ஆண்களுமாக நின்று தேர் ஓட ஊக்கிவித்தார்.

படித்து விட்டு வேலையின்றி இருந்த பெண் பிள்ளைகள் பலர் சேர்ந்து பழைய மாதர் சங்கத்தை இயக்கு வதற்கும் அதற்கான ஒரு கட்டிடம் அமைப்பதற்கும் பல பெரியோரின் உதவியை கேட்க அவர்கள் அதற்கு குடும்பப் பொறுப்பை காரணம் காட்ட எனது ஆசிரியர் எப்பொறுப்பு இருந்தும் இப்பொறுப்பை தனது சொந்த வேலையாக எடுத்து நிலம் வாங்குவதற்கு உரிய வழிவகைகள் செய்து நிலத்தை பெற்றுக் கொடுத்து, மாதர் சங்கம் என்ற கட்டிடம் பூர்த்தியாவதற்கு பல அரிய உதவிகளை செய்தார். இதனால் அப்பிள்ளைகளின் மனங்கள் ஆனந்தமும் நிம்மதியும் அடைந்தனர்.

நினைத்த காரியத்தை எத்தடை வந்தாலும் துணிந்து நின்று அக்காரியத்தை செய்து முடிப்பார். மற்றவர் செய்யும் குறை குற்றங்களை நேருக்கு நேர் கூறிவிடுவார் இதனால் அவர்களின் மனக்காழ்ப்புக்கு ஆள் ஆவர்.

இவர் நோய்வாய்பட்டு இருக்கிறார் என்பதை கேள் விப்பட்டதும் என் மனதில் ஒருவித நெருடல் ஏற்பட்டது. பின் இரண்டு மூன்று நாட்களின் பின் கதைக்கிறார் என் பதை அறிந்து சந்தோசப்பட்டேன். ஆனால் விதி வழியே எம் வாழ்வு என்பதை காட்டி முருகப் பெருமானின் பாதார விந்தங்களை அடைந்து விட்டார் சமய வாழ்வும், சமூக வாழ்வும் தம் இரு கண்கள் என வாழ்ந்த ஆசிரியர் எம்மை எல்லாம் விட்டுபிரிந்து விட்டார்.

''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக'' என்ற வள்ளுவரின் வாக்குக் அமைய வாழ்ந்து வழிகாட்டி சென்று விட்டார்.

அன்னாரின் வழிகாட்டல் அவரின் குடும்பத்தையும் எமது ஊரையும் மேன் நிலைக்கு கொண்டு வரும் என்பது எனது திண்ணம்.

ஓம்சாந்தி, சாந்தி, சாந்தி,

திருமதி. சிவக்கொழுந்து ஜெயரட்ணராஜா



உ

# பண்ணாகம் மாதர் சங்கத்திற்கு அயராது உழைத்த பெரியாருக்கு!

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளாகிய நாம் அமரர் திரு. அ. எதிர்வீரசிங்கம் ஆசிரியர் அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியையும் அனுதாபத்தையும் முதலில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது சங்கம் உள்ளளவும் அமரரின் நினைவு என்றும் இருக்கும். மாதர்களுக்கு என்று ஒரு நிலையான சங்கம் உருவானதே அமரரின் அயராத செயற்பாடே ஆகும். ஆரம்ப காலத்தில் எமது சங்கம் தனக்கென ஒரு கட்டடம் இல்லாமல் சில வீடுகளிலும் பின்னர் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலும் செயற்பட்டு வந்தது. பின்னர் 1978ம் ஆண்டு செயற்பட்ட நிர்வாகத்தினர் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் சென்று அவர்களோடும் முன்னாள் வட்டுக்கோட்டைப் பராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. தா. திருநாவுக்கரசு அவர்களோடும் ஆலோசித்தனர் இதற்கு எமக்கு ஆலோசனை தந்தவர் அமரர் எதிர்வீரசிங்கம் ஆசிரியர் அவர்கள் தான். அரசாங்க அதிபர் கூறினார் நிலம் வாங்கி அத்திவாரம் கட்டிக் காட்டினால் தாம் பணம் தருவதாக இதற்கும் எதிர்வீரசிங்கம் ஆசிரியர் அவர்கள் தான் தற்போது எமது சங்கம் இருக்கும் நிலத்தின் சொந்தக்காரரைக் கண்டு கதைத்து நிலம் வாங்க உதவி செய்தார்.

பின்னர் அன்று நிர்வாகத்தில் இருந்த நிர்வாகிகளின் நகைகளை அடைவு வைத்து நிலத்தை எமது சங்கத்தின் பெயரில் வாங்கித்தந்தவரும் இப் பெரியார் தான். பின்பு கட்டடம் கட்டுவதற்கு அமரர் அவர்களே தானே முன்னின்று மேசன் மற்றும் தொழிலாளர்களைக் கொண்டு பத்திரிப்பைக் கட்டினார். இதன் பின்னர் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் பணம் தரப்பட்டு கட்டடம் கட்டும்

வேலை தொடர்ந்தது. அப்பொழுது அமரர் அவர்களின் மூத்த மகள் செல்வி. எ. லோகநாயகியே சங்கப்பொருளாளர் பதவியில் இருந்தார். அமரர் அவர்கள் தனது சொந்த வீடு கட்டுவது போலவே மழை வெயில் என்று பாராது முன்னின்று கட்டடத்தைக் கட்டி முடித்தார். அவரது மகளின் பணியையும் நாம் என்றும் மறக்க முடியாது. சிலரின் எதிர்ப்புக்கள் இருந்தாலும் எதையும் பொருட்படுத்தாது எமக்கு சங்கக் கட்டடத்தை கட்டித்தந்த அமரரையும் நாம் என்றும் மறக்க முடியாது. அமரர் அன்று இருந்த நிர்வாகத்தினருக்குத் தந்த உற்சாகமும் அவரின் அயராத பணியுமே இன்று நாம் நிலையான ஒரு கட்டடத்தை காண முடிந்தது.

இப்படியான அரிய சேவை செய்த பெரியாரின் இழப்பு எமது ஊருக்கே பாரிய இழப்பாகும். தமது கடமைகளை என்றும் தவறாது செய்தவர் எமது குலதெய்வமாகிய விசவத்தனை வேலவனிடம மிகுந்த பக்தி உள்ளவர் அதனால் இப்பெரியாரை வேலவனே தன்னிடம் அழைத்துக் கொண்டார் என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

பிறந்தவர் யாவரும் ஒரு நாள் இறப்பது திண்ணம் என்பதற்கிணங்க பெரியாரின் பிரிவினால் துயருறும் அவரின் துணைவிக்கும் பிள்ளைகட்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய விசவத்தனை வேலவன் அருள வேண்டுகிறோம்.

—ஓம் சாந்தி—

இங்ஙனம்,

**பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்தி**
**சங்க நிர்வாகிகள்**

உ

# "கடமைவீரன் கந்தசாமி உபாத்தியார்"

என்னுடைய வாழ்க்கையில் பல அன்பர்களைச் சந்தித்துப் பழகும் வாய்ப்புப் பெற்றுள்ளேன். ஆனால் அண்மையில் அமரத்துவமெய்திய அன்பர் அப்பச்சி எதிர்வீரசிங்கம் ஒரு தனித் துவமானவர். அவரின் வாழ்க்கையில் அவர் பல கருமங்களைச் செய்தும் எந்த ஒரு செயலிலும் தன்னை விளம்பரம் செய்ய நினைத்ததில்லை, நான் கண்ட வேறு சிலருக்கு இவருக்கு வாய்த்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அந்தச் செயல்களி லெல்லாம் அவர்கள் தங்களை விலாசமாக விளம்பரஞ் செய்திருப்பார்கள். ஆனால் அன்பர் எதிர்வீரசிங்கம் தன்னை ஒருபோதும் பிரபல்யப்படுத்த அந்தச்சந்தர்ப்பங்களைப் பிரயோ கிக்கவில்லை.

எங்கள் விசவத்தனை முருகப்பெருமானின் (இரதம்) தேர் அவரின் விடாமுயற்சியைப் பறைசாற்றுகிறது. அத்தேரில் ஒலிக்கும் மணிகள் அவரின் முயற்சியால் எங்களூரிலுள்ள அன்னையரின் அன்புக்காணிக்கை

எந்தச்சந்தர்ப்பத்திலும் மனச்சோர்வின்றி எடுத்த கருமத்தைக் கூடிய சிரத்தையுடன் கையாழ்வதில் அவரை விஞ்ச ஒருவருமில்லையென்றால் மிகையாகாது கிராம அபிவிருத்திச் சபை கட்டுதலுக்கு இடம் தேடி கொடுத்தவர் அதாவது ஒரு தரும வள்ளலைத் தேடி அவரிடமிருந்து வேண்டிய இடத்தைப் பெற்றுக் கட்டிடமும் கட்டி முடித்தார்.

இவ்வூரில் மாதர்சங்கக் கட்டிடம் கட்ட நிலமில்லையென எல்லாரும் யோசித்த பொழுது அவர் தற்போது மாதர்சங்க மமைந்த நிலச் சொந்தக்காரனை தேடிப்பிடித்து அந்த நிலத்தை மாதர்சங்கத்துக்கு விலையாகப் பெற்று அதற்குரிய கட்டிடத் தையும் அழகாக அமைப்பித்தார். இதேபோல அவர் தன்னைத் தோற்றாமல் கடமையை பொது நன்மைக்காக பல குடும்பப் பிரச்சனைகளையும் தீர்த்து எல்லாரும் சந்தோஷமாக விருககத் தன்னுடைய சுயலாபங்களையும் தேடாது வாழ்ந்தார்.

அவர் அமரத்துவமடைய நெருங்கிய காலங்களில் சிவத் தொண்டில் சரிகை முறைகளை பக்தியுடன் செய்து மற்றவர் களும் அப்படி நடப்பது நல்லது என்று கூறினார்.

கோயில் கூட்டல், பூப்பறித்துக் கொடுப்பது திருவிளக்கிடுதல் முதலிய கருமங்களை தான் செய்து மற்றவர்கள் அதைப்பின்பற்றுவது நன்மை பயக்குமென்று கூறினார்.

அவரின் சுயநலம் கருதாத தொண்டுகள் அவரின் வாழ்க்கையை எடுத்துக் காட்டும் சின்னங்களாய் விளங்கும். அவரின் உத்தம மனைவியார், அன்புக்குழந்தைகள், அவரின் அன்பர்கள் பிரிவைத் தாங்கிய முருகப்பெருமானின் பாதாரவிந்தத்தில் அவரைத் காண பார்களாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

செ. திருநாவுக்கரசு

---

## தோன்றிற் புகழோடு தோன்றுக

அன்பின் திருவுருவாய்
ஆண்டவன் தோத்திரத்தை
இசையால் தினம்பாடியே
ஈன்றபொழுதை நற்பொழுதாக்கி
உண்மையின் தத்துவத்தை
ஊரறிய வளரச்செய்து
எம்மக்களின் உயர்வுக்காய்
ஏற்றத்தாழ்வு பாகுபாடின்றி
ஐக்கியமாக வாழ்ந்துகாட்டி
ஒன்றுபட்ட மனத்திருப்தியில்
ஓம் என்ற ஓங்கார உச்சரிப்புடன்
அமரத்துவம் அடைந்த எதிர்வீரசிங்கம்
அவர்களின் ஆத்ம சாந்திக்காக நாமும்
பிரார்த்திப்பதோடு அவர்களின் குடும்பத்
தினருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்

„சங்கை,,
இசைப்பயிற்சி நிலையம்
சங்கானை.

இயக்குனர்
ஆசிரியர்கள்
மாணவர்கள்.

புலன்களுக்கு இன்பம் புகட்டலே புரியும்
கலைகளின் மூலமாய் கருதலாம் என்றே
கடவுளின் நினைப்பே கலைகளில் கலந்திடப்
பழகிய பெருமையே தமிழ்க்கலைப் பண்பு

- நாமக்கல் கவிஞர்

உ
முகம் மலரப் புன்சிரிப்போ டெப்மை
என்றும் அன்பாய் உபசரித்த
அமரர்

# அப்பச்சி எதிர்வீரசிங்கம் (கந்தசாமி)

தோற்றம்:- 12- 04- 1914 மறைவு:- 11- 07- 1992

மண்ணில் பிறந்து வெண்ணீ றணிந்து
கண்ணிற் கினியனாய் புண்ணிய புருஷனாய்
தொண்ணூறை யெட்டாது கண் ணூறு பட்டதுபோல்
விண்ணில் மறைந்தாயே எண்ணிமனம் கலங்கினோம்.

அழகுங் குணமும் அறிவும் ஆற்றலு முள்ள
ஆசிரியனாய் மெய்கண்டானில் ஆண்டு பலவோதி
இல்லறமே நல்லறமாய் வாழ்ந்துங் காட்டி
ஈசனிற் கடியனாய் இரவு பகல் தொண்டாற்றி
உத்தம ஊராருடன் பரிபாலன சபையமைத்து
ஊக்கமுடன் முருகனுக்கு திருப்பணிகள்
எழிலூட்டும் வீதிகளும் நிழல் தரு சோலைகளும்
ஏழ்மையுற்றோர் பசியாற அன்னதான மடமும்
ஐஸ்வரியந் தேடி தேரு மன்றாட பூசைகளும்
ஒழுங்கு முறைபேணிச் சமய அபிவிருத்தி காண
ஓங்காரத் தத்துவனை விசவத்தனையில் திகழ வைத்தீர்
ஔடதம் போல் ஆகியதே உமது அரிய சேவை.

உள்ளங் குளிர வாய்த்த மனைவியும்
இளமையில் நன்நெறியிற் பயின்ற மக்களும்
ஊராரும் உறவினரும் பரிபாலன சபையினரும்
ஆறாத் துயரத்தி லாழ்ந்து வருந்தினர்
வேண்டுனோரும் சுற்றமும் தண்டிகையிற் சுமந்துமது
எண்சாண் உடம்பை இளையமகன் கொள்ளிவைக்க
திருவடி நிலையில் தீயில் இட்டனரே உமது
திருத்தொண்டும் பண்பாடும் உமை சிரஞ்சீவியாக்கினவே

## மனைவி மக்கள் கண்ணீர் அஞ்சலி

எமது வாழ்வின் புனித ஜோதி
எங்கு மறைந் தாயோ
இதயங் குளிரச் சேவை செய்தாய்
என்றும் மற வோமே
உள்ள தெல்லாம் நீயே யென்று
நம்பி வாழ்ந் தோமே இன்று
வெள்ளத்திலே மிதப்புத் தேடும்
அனாதை களா னோம்.

"பரங்குன்றம்"
சித்தன்கேணி

நீ முத்து வேலுப்பிள்ளை
குடும்பம்

## கர்மவீரர் எதிர்வீரசிங்கம்

பண்ணாகம் பெற்றெடுத்த பண்பாளரில், எங்கள் கந்தசாமி வாத்தியாரும் ஒருவராவர். கல்வியில் கருத்துடைய வர்களுக்கு கடமை, கண்ணியம் கட்டுப்பாடு நிறைந்த நல்லா சிரியராக விளங்கினார். கல்விக் கூடத்தை வெறும் பொழுது போக்கு மாடமாக நினைத்தவர்களுக்கு எதிர்வீரசிங்கமாகவே காட்சியளித்தார். தமது ஆசிரியப் பணியை திறம்படச் செய்து ஓய்வு பெற்றபின். தமது பொழுதைப் பொதுச் சேவையில் கழித்தார். பொதுச் சேவையில் ஈடுபட்டகாலத்தில் பிணக்குகள் வந்தபோது ஒதுங்கி நின்று ஐக்கியத்தை பாதுகாத்து வந்துள் ளார். பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தில் பொருளாளர் பதவியை ஏற்று நேர்மையாகச் செயல்பட்டார். இதோடு கோவில் தொண்டு செய்வதையே தமது முக்கிய குறிக்கோளாக்கினார். பதவி புகழ் இவற்றிற்காக பாடுபடா மல் பக்தியின் வசப்பட்டு தொண்டாற்றி வந்துள்ளார். அன்னாரின் இறுதிக் கிரியையில் கடைசிக் கும்பம் அபிஷேகம் செய்யும் போது அந்த விசவத்தனைக் கந்தனின் அசையா மணி அசைந்து ஒலி எழுப்பிய அதிசயம் நடந்தது. இவரின் பக்தியின் மகிமையை இந்த அதிசயம் எமக்கு எடுத்துக் காட்டி விட்டது. எங்கள் கந்தசாமி வாத்தியார் அந்தக் கந்தனடி சேர்ந்து விட்டார் என்பதற்கு இதுவே சான்றாகும்

வணக்கம்

பண்ணாகம் தெற்கு ஐக்கிய
நாணய சங்கம்.

ப. தெ. ஐ. நா. சங்கம்